**செ. கு. எண்: 243** **நாள்: 30.12.2018**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 30.12.2018</u>

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், தொழுவந்தாங்கல் கிராமத்தைச் சேர்ந்த திரு. அண்ணாமலை என்பரின் மகன் திரு. பாலகிருஷ்ணன் என்பவர் விவசாய நிலத்தில், நீர் பாய்ச்சிய போது, எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், வடக்கு வட்டம், திரு. வேலு (லேட்) என்பவரின் மகன் திரு. காந்திகுமார் என்பவர், விளாங்குடி உயர் மின் அழுத்த பகுதியில் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், ராசிங்காபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வாசகர் என்பவரின் மனைவி திருமதி பரமேஸ்வரி என்பவர் தனது வீட்டின் அருகே உள்ள இடத்தில் மாடுகளை கட்டி விட்டு திரும்பிய போது, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், மீஞ்சூர் குறுவட்டம், வல்லூர் கிராமம், வடசென்னை அனல் மின் நிலையத்தில் பணியில் ஈடுபட்டிருந்த திரு. துரைக்கண்ணு என்பவரின் மகன் திரு. மணி என்பவர் கீழே விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தேனி மாவட்டம், உத்தமபாளையம் துணை மின் நிலையத்தில், பணியில் ஈடுபட்டிருந்த உதவி மின் பொறியாளர் திரு. முருகேசன் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், பாலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சேம் என்பவர் மின்கம்பத்தில் ஏறிய போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், நாககுடி கிராமத்தைச் சேர்ந்த திரு. ரவி என்பவரின் மகன் திரு. ரஞ்சித் என்பவர் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், அழகிரிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜி என்பவரின் மகன் திரு. குமார் என்பவர் தனது விவசாய நிலத்திற்கு சென்ற போது, அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டம், மழையூர் சரகம், மேல பொன்னன்விடுதி கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னத்தம்பி என்பவரின் மகன் திரு. மணிகண்டன் என்பவர் தனது தோட்டத்திற்கு சென்ற போது, அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், பாளையஞ்சேர்ந்தங்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. பொன்னன் என்பவரின் மகன் திரு. கருணாநிதி என்பவர் விவசாய நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், செருவாவிடுதி தெற்கு கிராமத்தைச் சேர்ந்த திரு. சண்முகம் என்பவரின் மகன் திரு. ரவிசங்கர் என்பவர் மின் கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கும்பகோணம் வட்டம், தண்டந்தோட்டம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பிச்சை என்பவரின் மகன் திரு. கருப்பையன் என்பவர் விவசாய நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், தும்பிவாடி கிராமத்தைச் சேர்ந்த திரு. கந்தசாமி என்பவரின் மகன் திரு. செந்தில் குமார் என்பவர் உயர் மின்

அழுத்த கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பழனியப்பன் என்பவரின் மகன் திரு. ராஜவேல் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், சோழங்கநல்லூர் வட்டம், பெருங்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. கணேசன் என்பவரின் மகன் திரு. சரவணன் என்பவர் அறுந்து கிடந்த மின் கம்பியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேற்கண்ட பல்வேறு துயரச் சம்பவங்களில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த **15** நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த **15 நபர்களின் குடும்பத்திற்கு தலா மூன்று லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**